# பூர்வீகக் குடிகள் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவுவாசிகளின் குரல் பற்றிய பொதுசன வாக்கெடுப்பு

ஆஸ்திரேலிய மக்கள் பல நாடுகளிலிருந்து வந்தவர்கள், பல மதநம்பிக்கைகளைப் பின்பற்றுகிறார்கள், மற்றும் பல மொழிகளைப் பேசுகின்றார்கள். பூர்வீகக் குடிகள் மற்றும் டொரஸ் நீரிணைத் தீவு மக்களே ஆஸ்திரேலியாவின் முதல் மக்கள் அத்துடன் 65,000 ஆண்டுகளுக்கும்மேலாக இங்கு வாழ்கின்றவர்கள். ஆனால் ஆஸ்திரேலியாவின் அரசியலமைப்பானது அவர்களின் தனித்துவமான நிலையை அங்கீகரிக்கவில்லை. அதனால்தான் இந்த ஆண்டின் பிற்பகுதியில், ஒரு பொதுசன வாக்கெடுப்பு மூலம் எமது அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதைக் கருத்திற்கொள்ள எம்மால் முடியும். எம் அரசியலமைப்பில் இருக்கின்ற, பூர்வீகக் குடிகள் மற்றும்டோரஸ் நீரிணைத் தீவு மக்கள், அவர்களைப் பாதிக்கும் பிரச்சனைகள் குறித்து அவர்களுக்கான ஒரு குரல் மூலம் ஆலோசிக்கப்படுவதை அங்கீகரிக்கும் வாய்ப்பை அனைத்து ஆஸ்திரேலியர்களும் பெறுவார்கள்.

### உள்ளத்திலிருந்து உளுறு அறிக்கை (Uluru Statement from the Heart) என்பது என்ன?

2017 மே மாதத்தில் இல், 250 இற்கும் மேற்பட்ட பூர்வீகக் குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள், உள்ளத்தில் இருந்து உளுறு அறிக்கையை வெளியிட்டனர். ஆஸ்திரேலியா முழுவதற்கும் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கவும், ஆஸ்திரேலிய அரசியலமைப்பில் பூர்வீகக் குடியினரின் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் ஒரு குரலை உள்ளடக்கவும் இது நம்மைக் கோருகின்றது.

### பூர்வீகக் குடியினரின் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரல் என்றால் என்ன?

பூர்வீகக் குடியினரின் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரல் என்பது, அவர்களைப் பாதிக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து அரசாங்கத்திற்குப் பூர்வீகக் குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் தெரிவிப்பதற்கானதொரு வழியாகும்.

### பொதுசன வாக்கெடுப்பு என்றால் என்ன?

பொதுசன வாக்கெடுப்பு என்பது 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதிலளிக்க வாக்காளர்களைக் கோருவது. ஆஸ்திரேலியாவின் அரசியலமைப்பை மாற்றுவதற்கான ஒரே வழி பொதுசன வாக்கெடுப்பு மட்டுமே.

### பொதுசன வாக்கெடுப்பில் யார் வாக்களிக்க முடியும்?

வாக்களிக்கப் பதிவு செய்தவர்கள் மட்டுமே பொதுசன வாக்கெடுப்பில் பங்கேற்க முடியும். பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள்ப் பொதுசன வாக்கெடுப்புக்களில் வாக்களிப்பது கட்டாயமாகும்.

### பொதுசன வாக்கெடுப்பில் நான் வாக்களிப்பது எவ்வாறு?

பொதுசன வாக்கெடுப்பு என்பது தேர்தல் போன்றது. வாக்குப்பதிவு நாளில், நீங்கள் ஒரு வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்குச் சீட்டில் வாக்களிக்கலாம்.

### பொதுசன வாக்கெடுப்பு எவ்வாறு முடிவு செய்யப்படுகிறது?

பொதுசன வாக்கெடுப்பு வெற்றிபெற, அதற்கு இரட்டைப் பெரும்பான்மை தேவை. இதன் பொருள் குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களிலும் முழு ஆஸ்திரேலியாவிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவது.

### பூர்வீகக் குடியினரின் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரல் பொதுசன வாக்கெடுப்பு எப்போது நடைபெறும்?

பூர்வீகக் குடிகளின் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரல் பற்றிய பொதுசன வாக்கெடுப்பு இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும்.

### பூர்வீகக் குடிகளின் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரல் பொதுசன வாக்கெடுப்பில் கேட்கப்படும் கேள்வி என்ன?

*"ஒரு முன்மொழியப்பட்ட சட்டம்: பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரலை நிறுவுவதன் மூலம் ஆஸ்திரேலியாவின் முதல் மக்களை அங்கீகரிப்பதற்காக அரசியலமைப்பை மாற்றுவதற்காக முன்மொழியப்பட்டது. இந்த முன்மொழியப்பட்ட மாற்றத்தை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?"*



அங்கீகரிப்பது Tabatha Feher, Life Without Barriers, L6, 107 Pitt St, Sydney, NSW.

## இந்தத் தகவல் தாளை உருவாக்கியவர் யார்?

Life Without Barriers, Reconciliation Australia, SNAICC – National Voice for our children, Yes Alliance மற்றும் Polaron Language Services ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இந்தத் தகவல்தாள் உருவாக்கப்பட்டது. பூர்வீகக் குடியினரின் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரல் பற்றிப் பெறக்கூடிய தகவல்களை உருவாக்குவதற்கு உதவுவதற்காக இந்தப் பங்காண்மை உருவாக்கப்பட்டது.

**மேலதிக தகவல்**

www.lwb.org.au



அங்கீகரிப்பது Tabatha Feher, Life Without Barriers, L6, 107 Pitt St, Sydney, NSW.